பெறுவதற்கு நாகப்பட்டினத்திற்குத்தான் செல்ல வேண்டியிருக்கிறது. மீனவ மக்களுடைய வாழ்வாதாரத்தையும், அவர்களுடைய பொருளாதாரத்தையும் உயர்த்துவதற்காக கடல்சார் மீனவர்களின் மக்கள்தொகைக் கணக்கெடுப்பு எடுப்பதாக நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய அறிவிப்பிலே சொல்லியிருக்கிறார்கள். அப்படியிருக்கும்போது, பத்தாண்டுகளுக்கு முன்னாலே பழையாற்றிலே இயங்கி, மூடப்பட்ட மீன்வளத் துறை உதவி இயக்குநர் சார்பு அலுவலகத்தைப் பூம்புகாரிலே தொடங்குவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடுகள்)*

[குறிப்பு: *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

முற்பகல் 10-35

2. தகவல் கோரல்

(அ) கோவை, ஈரோடு மாவட்ட திராவிட பஞ்சாலைத் தொழிலாளர் சங்கக் கட்டடத்திற்குள் சென்ற ம.தி.மு.க.வினர் கைது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் எல்லோரும் முன்னறிவிப்புக் கொடுத்துள்ள விஷயத்தைத்தான் நான் எடுக்கப் போகிறேன். எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகளைத்தான் எடுக்கப் போகிறேன். உட்காருங்கள். வேலூர் மாவட்டம், வாணியம்பாடி, கச்சேரி ரோட்டில் உள்ள தோல் பதனிடும் தொழிற்சாலையின் கழிவு நீர்த் தொட்டியில் (குறுக்கீடுகள்) அதற்கு நேற்றே நான் disposal கொடுத்துவிட்டேன். திரும்பவும் ஏன் raise பண்ணுகிறீர்கள்?

2010 மே 6] [பேரவைத் தலைவர்]

வேலூர் மாவட்டம், வாணியம்பாடி, கச்சேரி ரோட்டில் உள்ள தோல் பதனிடும் தொழிற்சாலையின் கழிவு நீர்த் தொட்டியில் *30-4-2010* அன்று ஐந்து தொழிலாளர்கள் விஷ வாயு தாக்கி இறந்தது குறித்து, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக *(குறுக்கீடுகள்)* நான் சொல்வதைக் கேளுங்கள். இன்று காலையிலேயே டாக்டர் சதன் திருமலைக்குமார் அவர்கள் என்னை வந்து பார்த்தார்கள். அவர் அந்த order-ஐயும் என்னிடம் காட்டினார்கள். அவரிடம் விவரத்தைச் சொல்லிவிட்டேன். அவருக்கு எல்லாம் தெரியும். அதனால், அவருக்காக நீங்கள் ஏன் கேட்கிறீர்கள்? உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* நான் நேற்றே என்னுடைய தீர்ப்பைச் சொல்லிவிட்டேன். அதாவது, நீதிமன்றத்திலே வழக்கு நிலுவையில் இருக்கும்போது, விதிகள் *65* மற்றும் *92*-ன்கீழ், மன்றத்தில் ஆய்விற்கு எடுக்க முடியாது என்பதைச் சொல்லிவிட்டேன். *(குறுக்கீடுகள்)* நீங்கள் நேற்றே "mention" பண்ணியிருக்கிறீர்கள். *(குறுக்கீடுகள்)* சரி, டாக்டர் சதன் திருமலைக்குமார் மட்டும் சொல்லுங்கள். ஆனால், நீதிமன்ற வழக்கிற்குள் சென்று பேசினால் நான் அனுமதிக்கமாட்டேன்.

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்ற வழக்கிற்குள் போகவில்லை. கோவை, பெரியார் மாவட்ட திராவிட பஞ்சாலைத் தொழிலாளர் சங்கம் *1959* ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டு, *1960* ஆம் ஆண்டிலிருந்து இயங்கிக் கொண்டிருந்தது. அச்சங்கம் *1993* ஆம் ஆண்டில் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் . . . *(குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்லிவிடுகிறேன். *(குறுக்கீடுகள்)* I am raising a point of order. If Hon'ble Speaker allows, I am going to say. Let me finish. *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் பேசும்போது குறுக்கிடாதீர்கள், உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* அமைச்சர் பேசும்போது யாரும் குறுக்கிடுவதற்கு அனுமதி கிடையாது, உட்காருங்கள். மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

[2010 மே 6

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு வழக்கு குறித்து ஆரம்பத்திலிருந்து சொல்கிறார். ஆனால், இரண்டு நீதிமன்றங்களில் இரண்டுவிதமான தீர்ப்புகள் வந்ததையொட்டி, உயர் நீதிமன்றத்தில் மனுச் செய்யப்பட்டு, அது நிலுவையில் இருக்கிறது. அந்த வழக்கு இன்றைக்கு விசாரணைக்கு வருகிறது. இந்த நிலையில், நீதிமன்றத்திலே நடந்து கொண்டிருக்கிற ஒரு வழக்கு குறித்து சட்டமன்றத்திலே எடுத்துப் பேசுவது, எந்த வகையிலே நியாயம்? காரணம், இப்போது அவருடைய வாதத்தை அவர் எடுத்து வைப்பார். பதில் வாதத்தை நான் எடுத்து வைப்பேன். ஆனால், நீதிமன்றத்திலே இருக்கின்ற வழக்கிற்கு அது சாதகமாக அல்லது பாதகமாக அமையும். எனவேதான் சொல்கிறேன், பெரும்பாலும் இன்றைக்கு அந்த வழக்கு முடிந்துவிடும். எனவே, பொறுத்திருக்கச் சொல்லுங்கள். நாளை பார்க்கலாம். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. ஓ. பன்னீர்செல்வம், கொஞ்சம் கேளுங்கள். மற்றவர்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்). திரு. செ.ம. வேலுசாமி, நான் மீண்டும் மீண்டும் எச்சரிக்கிறேன். நீங்கள் மிக அதிகமாகப் பேசுகிறீர்கள். நான் திரும்பத் திரும்பச் சொல்கிறேன். மிக அதிகமாகப் பேசுகிறீர்கள். ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடுகள்) டாக்டர் தி. சதன் திருமலைக்குமார், கொஞ்சம்* adjust *பண்ணுங்கள். இன்றைக்கு நீதிமன்றத்திலே விசாரணைக்கு வருகிறது. நாளை எடுத்துக்கொள்ளலாமே? இப்போது என்ன அவசரம்? (குறுக்கீடுகள்) நீங்கள் கொடுத்த* judgement order *என்னிடம் இருக்கிறது. (குறுக்கீடுகள்) ஏற்கெனவே என்னுடைய தீர்ப்பை நான் நேற்றே சொல்லிவிட்டேன். (குறுக்கீடுகள்) சத்தம் போடுவது யார்? திரு. சின்னசாமியா? நான் நடவடிக்கை எடுப்பேன். திரு. ஆர். சின்னசாமி, திரு. செ.ம. வேலுசாமி, இரண்டு பேரும் அதிகமாகப் பேசுகிறீர்கள். ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள். திரு. எல். ரவிச்சந்திரன், உங்கள் மூன்று பேரையும் நான் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறேன்.*

முற்பகல் 10-40

டாக்டர் சதன் திருமலைக்குமார், நீங்கள் காலையிலே வந்து என்னைப் பார்த்தீர்கள், நான் உங்களிடம் விஷயத்தைச் சொன்னேன் அல்லவா? திரும்பவும் இவர்கள் சொல்கிறார்கள் என்று நீங்கள் எழுந்து நின்றால் என்ன அர்த்தம்? உட்காருங்கள்.

2010 மே 6] [பேரவைத் தலைவர்]

(குறுக்கீடுகள்) நான் சொல்லிவிடுகிறேன். போலீசினுடைய அத்துமீறல் குறித்து சொல்லவேண்டும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள், அதுதானே? அதை நான் நாளை எடுக்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் என்னைக் கட்டாயப்படுத்தாதீர்கள், நாளைக்கு எடுக்கிறேன், உட்காருங்கள். நாளைக்கு எடுக்கிறேன் என்று சொல்லிவிட்டால் உட்காரவேண்டும். (குறுக்கீடுகள்) அனுமதிக்க முடியாது, உட்காருங்கள்.

3. சிறப்புக் கவன ஈர்ப்பு

வாணியம்பாடி, கிலானி தோல் பதனிடும் தொழிற்சாலையில் விஷ வாயு தாக்கி ஐந்து துப்புரவுப் பணியாளர்கள் இறப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, வேலூர் மாவட்டம், வாணியம்பாடி, கச்சேரி ரோட்டில் உள்ள தோல் பதனிடும் தொழிற்சாலை, கழிவு நீர்த் தொட்டியில் 30-4-2010 அன்று 5 தொழிலாளர்கள் விஷ வாயு தாக்கி இறந்தது குறித்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எச். அப்துல் பாசித், திரு. அ. சின்னசாமி ஆகியோரும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. பி.கே. சேகர்பாபு, திரு. கு. பாண்டுரங்கன், திரு. எல். ரவிச்சந்திரன் ஆகியோரும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்களும், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. தி. வேல்முருகன், திரு. கே.எல். இளவழகன் ஆகியோரும், மார்க்சிய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் செல்வி கே. பாலபாரதி, திரு. என். நன்மாறன், திரு. ப. டில்லி பாபு, திரு. வே. மாரிமுத்து, திருமதி ஜி. லதா, திரு. ஞா. ஜாண் ஜோசப் ஆகியோரும், இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம் அவர்களும், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் டாக்டர் தி. சதன் திருமலைக்குமார், திரு. ஆர். ஞானதாஸ், திரு. ரா. வரதராஜன் ஆகியோரும், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார் அவர்களும் விதிகள் 56 மற்றும் 55-இன்கீழ் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதனை சிறப்புக் கவன ஈர்ப்பாக